सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு **K. கைலாஷ்நாதன்** அவர்கள்

# *புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை*




**மார்ச் 10, 2025**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு **K. கைலாஷ்நாதன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.**

**-(குறள்)**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !***
***மாண்புமிகு உறுப்பினர்களே !***

***வணக்கம் !***

**மு**தல் முறையாக உங்களிடம் நான் முறைப்படி உரையாற்றுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கிறது. இந்த மேன்மைமிகு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மற்றும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் மக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அமைதியான நல்லிணக்கம், ஆன்மீக தேடல் மற்றும் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக, இந்நாடு முழுவதும் அறியப்பெற்ற இவ்வாட்சிப்பரப்பு, வளர்ச்சிப் பயணத்தில் எனது பங்களிப்பும் இருப்பது பெருமைக்குரியதாகும். இவ்வாட்சிப்பரப்பின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான

நமது கூட்டு முயற்சியில் எனது அரசுக்கும் எனக்கும் உங்கள் மதிப்புமிக்க ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய உங்கள் அனைவருக்கும் மற்றும் புதுச்சேரி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** முதலாவதாக, இந்தியாவின் முன்னாள் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தனது புகழ் பெற்ற, பொது சேவை வாழ்க்கைப் பயணத்தின் போது, தேசத்தைத் தட்டியெழுப்புவதற்கும், பொருளாதார சவால்களைச் சமாளிப்பதற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானதாகும் மற்றும் அவருடைய மறைவு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். மேலும், புதுச்சேரியின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்குவகித்த முன்னாள் முதலமைச்சரான எம்.டி. ராமச்சந்திரன் அவர்களின் மறைவும் பேரிழப்பாகும்.

**3.** ஆகஸ்ட், 2024 முதல் உங்களுடன் எனது இணைப்பை தொடங்கியதிலிருந்து, பல்வேறு துறைகளின் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சிக்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திறமையான இளம் மனிதவளத்திற்கு, உறுதியான மற்றும் வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்புகளை வழங்குவது என்ற ஒரே முக்கிய நோக்கத்தை மையமாகக் கொண்டு அரசின் செயல் திட்டங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**4.** மேலும், அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், இவ்வாட்சிப்பரப்பின் பல்வேறு பகுதிகளுக்கும் குறிப்பாக காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் போன்ற தொலைதூர பகுதிகளையும் நான் பார்வையிட்டேன். இந்தப்பயணத்தின் போது, முக்கியமான திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, மேம்பாட்டு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்களின் சிறப்பான பணிகளுக்கு நான் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கருத்துபடி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மட்டும்தான், மாணவர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றவர்கள் உட்பட அனைவரும் மிகச் சிறப்பான சமூகநல திட்டங்களின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

**5.** ஃபெங்கல் புயல் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தியது மட்டுமல்லாது மிக மோசமான பேரழிவுகளை ஏற்படுத்தியது. இந்த புயலானது சொத்துக்களுக்கு கடுமையான மற்றும் மோசமான சேதங்களை ஏற்படுத்தியதுடன் சாதாரண மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்துவிட்டது. அரசாங்கம் உடனடியாக குறுகிய காலத்தில் மிகப்பெரிய மறுவாழ்வு முயற்சிகளை மேற்கொண்டது.

இது நமது குடிமக்களின் இயல்பு வாழ்க்கையை மிகக் குறுகிய காலத்தில் மீட்டெடுத்துள்ளது. புதுச்சேரி குடிமக்களின் சிரமங்களைக் குறைப்பதற்கும் உடனடி உதவியை வழங்குவதற்கும், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியங்களை உள்ளடக்கிய ரேஷன் அட்டை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு தலா ₹ 5,000 வீதம் மொத்தமாக ₹ 177.22 கோடி நிவாரணத்தை அரசாங்கம் சரியான நேரத்தில் வழங்கியது. இதேபோல், விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ₹ 30,000 உடனடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியத்தைச் சேர்ந்த 8,678 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் பாதிக்கப்பட்ட 12,955 விவசாயிகளுக்கு ₹ 24.11 கோடி வழங்கப்பட்டுள்ளது. கால்நடைகள் கிராமப்புற பொருளாதாரத்தின் மிக முக்கியமான முதுகெலும்பாகும். மேலும் அவற்றின் இழப்பும் போதுமான அளவு ஈடுசெய்யப்பட்டது. ஃபெங்கல் புயலுக்கு உடனடி நிவாரண நடவடிக்கையாக அரசாங்கம் மொத்தமாக ₹ 207.18 கோடி நிவாரணத்தை வழங்கியுள்ளது. நிவாரணப் தொகையை உடனடியாக அறிவித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சரை நான் வாழ்த்துகிறேன், மேலும் அறிவிக்கப்பட்ட அனைத்து நிவாரண நடவடிக்கைகளும் மிகக் குறுகிய காலத்தில் வழங்கப்பட்டன. இந்நிவாரணம், நான் அறிந்தவரையில் நம்நாட்டில் இதுவரை விரைவாக வழங்கப்பட்ட நிவாரணங்களில் ஒன்றாகும்.

**6.** உடனடி நிவாரணமாக ₹ 61 கோடி நிதி அளித்து இவ்வாட்சிப்பரப்புக்கு, உரிய நேரத்தில் உதவி புரிந்த மத்திய அரசுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது போன்று நிதி உதவி நம் ஆட்சிப்பரப்பிற்கு மத்திய அரசு ஏற்கனவே வழங்கிய பேரிடர் உதவி தொகையான ₹ 22 கோடியும் சேர்த்து மொத்தமாக ₹ 83 கோடியாக வழங்கியது இதுவே முதன் முறையாகும்.

**7.** இவ்வாட்சிப்பரப்பு மக்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக இருக்கும் வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் மேம்பாட்டு சவால்களை எதிர்கொள்ள முடியும் என்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது. நிதி மேலாண்மையைப் பொறுத்தவரையில், 2024-25ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடான ₹ 12,700 கோடியைவிட ₹ 535 கோடி கூடுதல் தொகையுடன் 2024-25ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு ₹ 13,235 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் தொகை இவ்வாட்சிப்பரப்பின் வளர்ச்சி மற்றும் பிற தவிர்க்க முடியாத செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**8.** 2023-24ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்திய குறியீட்டின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் 74 மதிப்பெண்களுடன் மற்ற யூனியன் பிரதேசங்களுக்கிடையில் நமது ஆட்சிப்பரப்பு இரண்டாவது இடத்தில் உள்ளது. இது 2020-21ஆம் ஆண்டில்

வெளியிடப்பட்ட முந்தைய மதிப்பெண் 68-ஐ விட விஞ்சி உள்ளது. நமது ஆட்சிப்பரப்பு இந்தக் குறியீட்டில், 'மலிவு மற்றும் தூய்மையான எரிசக்தியில்' (Afforadable and Clean Energy) 'சாதனையாளர்' எனவும், 'பசியில்லா நிலை', தொழில்கள் கண்டுபிடிப்பு, உள்கட்டமைப்பு மற்றும் 'குறைக்கப்பட்ட சமத்துவமின்மை' என்ற இலக்கில் முதலிடத்திலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த மேன்மைமிகு அவைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

**9.** தற்போதுள்ள அரசு காலிப்பணியிடங்களை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நிரப்பும் குறிக்கோள் என்பது எனது அரசின் முன்னுரிமையாக உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில், பல்வேறு அரசு துறைகளில் காலியாக உள்ள சுமார் 2,444 பணியிடங்கள் நேரடி மற்றும் வெளிப்படையான போட்டித் தேர்வுகள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்ப பணிகள் நடைபெற்று வருகின்றன.

**10.** மேலும், இவ்வாட்சிப்பரப்பில் 236 சிறு, குறு மற்றும் நடுத்தர புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, 10,888 இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தவிர, 35 'மெகா' வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் பல்வேறு திறன்மேம்பாட்டு பயிற்சிகள் இளைஞர்களுக்கு நடத்தப்பட்டதன் வாயிலாக 8,460 இளைஞர்கள் பல்வேறு தனியார் துறை பணிகளில்

சேர்ந்து, மொத்தம் 21,792 இளைஞர்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதன் விளைவாக இவ்வாட்சிப்பரப்பின் வேலைவாய்ப்பின்மையின் வளர்ச்சி விகிதம் 2020-21இல் 6.7 விழுக்காட்டிலிருந்து 2024-25-இல் 4.3 விழுக்காடாக குறைந்து 2.4 விழுக்காடு கணிசமான இறக்கத்தை கண்டுள்ளது.

**11.** பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் ₹ 534 கோடி செலவில் குடிநீர் வழங்கல் திட்டம் புதுச்சேரி அரசால் செயல்படுத்தப்படுகிறது. சங்கராபரணி ஆறுக்கு அருகிலும் நகர்ப்புறங்களிலும் கூடுதலாக 40 குழாய் கிணறுகளை நிறுவுவதன் மூலம், ஊசுடு, பாகூர், அபிஷேகப்பாக்கம், கோர்க்காடு மற்றும் வாதானூர் ஆகிய 5 முக்கிய ஏரிகளிலிருந்து மேற்பரப்பு நீர் ஆதாரங்களை எடுக்கவும், ஆழமான நீர்நிலையிலிருந்து நிலத்தடி நீரை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வில்லியனூர், உத்தரவாகினிப்பேட், ஜெயராம் நகர், காலாப்பட்டு பகுதியின் அமைதி நகர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை கட்டுவதோடு, தற்போதுள்ள PVC விநியோக அமைப்பை உலோகக் குழாய் மற்றும் HPPE குழாய்களுடன் மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக ₹ 123.25 கோடி மதிப்பில் டெண்டர் கோரப்பட்டுள்ளது.

**12.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் ₹ 4,750 கோடியில் இந்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம், 50 MLD கொள்ளளவு கொண்ட 2 Desalination Plants நிர்மாணித்தல், மேற்பரப்பு நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள நீர் வழங்கல் அமைப்புகள், கழிவுநீர் மற்றும் வடிகால் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புதுச்சேரியின் நான்கு பிராந்தியங்களிலும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் சாலை இணைப்பை மேம்படுத்துதல் ஆகும். ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடன் உதவியைப் பெறுவதன் மூலம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் (MoHUA) சமீபத்தில் நீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் கூறுகள் தொடர்பாக ₹ 3,290 கோடிக்கான திட்டத்தை பரிந்துரைத்துள்ளது, மேலும் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (MoRTH) சாலை கூறுகள் தொடர்பான திட்டத்தை நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறைக்கு பரிந்துரைத்துள்ளது.

**13.** ராஜீவ் காந்தி சதுக்கத்திலிருந்து இந்திரா காந்தி சதுக்கம் வரை உயர்த்தப்பட்ட மேம்பால வழித்தடத்தை அமைப்பதற்கும், கடலூர் சாலையை 20 கிலோ மீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் ₹ 1,000 கோடி நிதி உதவி வழங்குமாறு புதுச்சேரி அரசு அக்டோபர் 2024-இல்

மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (MoRTH) இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, வரும் நிதியாண்டில் உயர்த்தப்பட்ட வழித்தடம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளது.

**14.** குடிநீர் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக மேற்பரப்பு நீரைச் சேமிப்பதற்கும், நிலத்தடி நீர் திறனை மேம்படுத்துவதற்கும் புதுச்சேரி பகுதியில் உள்ள 78 குளங்களை பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் மீட்டமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ₹ 750 கோடிக்கு ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, WAPCOS மூலம் மத்திய அரசின் நிதியுதவி பெற்ற RRR திட்டத்தின் கீழ் 90% மத்திய மானியத்தைப் பெறுவதற்காக ஜல் சக்தி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

**15.** PY-SHORE என்ற திட்டம், அக்டோபர் 2024-இல் இந்திய அரசின் பொருளாதார விவகாரத் துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. உலக வங்கி நிதி உதவியுடன் ₹ 1,433 கோடி செலவில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம், கடலோர சவால்கள் மற்றும் கடலோர வாழ்வாதார பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதுச்சேரியின் வலுவான கடலோரப் பொருளாதாரம் உறுதி செய்யப்பட உள்ளது. இந்தத் திட்டதின் மூலம் கழிவுநீரை தடுத்தல்,

திசைதிருப்புதல் மற்றும் புதுச்சேரியின் பகுதிகளுக்கு 50 MLD திறன் கொண்ட STP நிர்மாணித்தல், கனகன் ஏரியில் 17 MLD திறன் கொண்ட STP-யின் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் கனகன் ஏரி STP-யிலிருந்து முருங்கப்பாக்கம் ஏரி உபரிவரை குழாய் பதித்தல், பருவமழை ஓட்டத்தைப் பயன்படுத்தி கடலோர மண்டலத்தில் உள்ள ஆழமற்ற நீர் ஆதாரங்களை ₹ 590 கோடிக்கு ரீசார்ஜ் செய்தல் ஆகியவை அடங்கும். இந்த முன்மொழிவுக்கு புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளன, மேலும் இது நிதி ஆயோக் மற்றும் உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**16.** 2024-25ஆம் ஆண்டில், புதுச்சேரியில் ஏழு இடங்களில் சாலைகளை மேம்படுத்துதல், முத்தியால்பேட்டை நீர் விநியோக அமைப்பை மறுசீரமைத்தல், தலா 1 MLD கொள்ளளவு கொண்ட உவர் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பான பணிகளுக்காக ₹ 171.98 கோடி மதிப்புள்ள திட்டங்களை நபார்டு வங்கி அனுமதித்துள்ளது. காரைக்கால், மாகி மற்றும் புதுச்சேரியில் உள்ள சாலைத் திட்டங்கள் ஏற்கனவே ₹ 99.38 கோடிக்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ₹ 221.17 கோடி மதிப்பீட்டில் 13 திட்டங்கள் ஏற்கனவே நபார்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**17.** AFD உதவித் திட்டம் மற்றும் நபார்டு வங்கி மூலம், தற்போது நடைபெற்று வரும் பணிகளுக்காக, மொத்த முதலீடாக ₹ 659 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் வரும் ஆண்டுகளில் ₹ 8,467 கோடிக்கான புதிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**18.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்திய அரசானது பிரதமர் ஏக்தா மால் ஏற்படுத்த ₹ 104 கோடி ஒதுக்கியுள்ளது. பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பயன்கள் தரக்கூடிய இந்த முக்கியமான செயல்திட்டத்தின் DPR இந்திய அரசின் தொழில் மற்றும் வணிக அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும் பொழுது 'பிரதமர் ஏக்தா மால்' சந்தை மூலம் இந்தியா முழுமைக்கும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தல், சந்தைப்படுத்தல் சாத்தியமாகும். முக்கியமாக நம் உள்ளூர் கைவினைப்பொருட்களும் தரநிர்ணயம் செய்யபெற்ற பொருட்கள் யாவும் இவற்றுள் அடங்கும். புதுச்சேரி விமான நிலையத்தின் ஓடுதளத்தை 3,000 மீட்டராக விரிவுபடுத்தவும், புதுச்சேரிக்கு ரயில் இணைப்பை மேம்படுத்தவும் இவ்வரசு ஏற்கனவே ஆயத்தப்பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**19.** புதுச்சேரி பொலிவுரு நகர அமைப்பு, ₹ 620 கோடிக்கான திட்டப்பணிகளை பொதுப்பணித்துறை, புதுச்சேரி நகராட்சி, போக்குவரத்துத்துறை, சுகாதாரத்துறை போன்ற பல்வேறு துறைகள் மூலம் நிறைவேற்றி வருகிறது. இப்பணிகள் கல்வி, சுகாதாரம்,

போக்குவரத்து, மழைநீர் வடிகால், பாதாளசாக்கடை போன்ற பல்வேறு பகுதிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் ₹ 175 கோடிக்கான பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் ₹ 445 கோடிக்கான பணிகள் நடைபெற்றுவருகிறது. அவற்றை விரைந்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**20.** சுமார் ₹ 33.37 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் விரைவில் பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. இந்த புதிய கட்டமைப்பு சிறந்த வசதிகளை வழங்குவதுடன் போக்குவரத்து நெரிசலை களையவும் சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதாகவும் இருக்கும். இதேபோல ₹ 99.63 கோடியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த “கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்” மக்கள் சேவைக்கு முன்னோடியாக அமைவதுடன் ஆரோக்கியம், சுகாதாரம், பொதுப்போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான தரவுமேலாண்மை அமைப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

**21.** நமது வருவாய் ஆதாரங்களை அதிகரிப்பதற்கான ஆதாரங்களும் வாய்ப்புகளும் மிகவும் குறைவாக இருந்தபோதிலும், அரசு எடுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால், இவ்வாட்சிப்பரப்பின் வரவுகள் 2020-21ஆம் ஆண்டில் ₹ 8,418.96 கோடியிலிருந்து 2023-24ஆம் ஆண்டில் ₹ 11,311.92 கோடியாக உயர்ந்து 34.36 விழுக்காடு வளர்ச்சியை எட்டியது.

**22.** பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில் இவ்வாட்சிப்பரப்பு குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்துள்ளதை அறிவிப்பதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நமது பொருளாதாரத்தின் அளவு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 44.06% அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதமான 9.56% எட்டியுள்ளது. 2020-21ஆம் ஆண்டில் -2.21% இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதம் 2024-25ஆம் ஆண்டில் 8.81% எட்டியுள்ளது.

**23.** தற்போதைய விலையில் தனிநபர் வருமானம் 2024-25இல் 5.33% அதிகரித்து 2023-24ஆம் ஆண்டில் ₹ 2,87,354-லிருந்து ₹ 3,02,680-தை அடைந்து ஒவ்வொரு தனிநபரிடமும் கூடுதலாக ₹ 15,000 இருப்பதை தரவுகள் கூறுகின்றன.

**24.** நடப்பு நிதியாண்டான 2024-25ல் அரசின் முக்கிய சாதனைகளைப் பற்றிச் சொல்வதற்கு முன்பு மக்களின், குறிப்பாக இளைஞர்களின் நலனில் அர்ப்பணிப்பு மற்றும் அக்கறையை வெளிப்படுத்தும் வகையில் அரசு வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் சில முக்கியத் திட்டங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்கு:

* “புதியதாகப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்கும் முதலமைச்சரின் அரவணைப்பு திட்டம்”,
* “வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பத்தலைவிகளுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கும் திட்டம்”,
* “முதலமைச்சரின் எரி வாயு மானிய திட்டம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு மாலை சிற்றுண்டி திட்டம்”,
* “பொதுத் தேர்வுகளில் அரசு பள்ளிகளில் பிராந்திய அளவில் முதலிடமும் மற்றும் பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்”,
* “அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம்”,
* “இவ்வாட்சிப்பரப்பின் அரசு பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மருத்துவம் / பல் மருத்துவம் / ஆயுர்வேத மருத்துவ படிப்புகளில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு திட்டம்”,
* “தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்விக்கான முழுக் கட்டணம் வழங்கும் திட்டம்”.

**25.** பெருந்தலைவர் காமராஜர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் சொந்த வீடு இல்லாத 5,302 ஏழைக் குடும்பங்கள் 2021-க்கு பிறகு தங்கள் கனவு இல்லத்தை கட்டி முடித்துள்ளனர், மேலும், 5,252 வீடுகள் கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. PMAY திட்டத்தின் கீழ், இந்திய அரசு வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு ₹ 1½ இலட்சத்தை வழங்குகிறது. புதுச்சேரி அரசு மாநிலப் பங்களிப்பாக 2021ஆம் ஆண்டில் ₹ 2½ இலட்சத்திலிருந்து ₹ 3½ இலட்சமாகவும், இத்தொகை 2024ஆம் ஆண்டில் ₹ 4 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மற்ற பயனாளிகள் 2022ஆம் ஆண்டுக்கு முன்பு மாநில பங்காக ₹ 50,000 பெற்று வந்தனர், இது 2022ஆம் ஆண்டு முதல் ₹ 2 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டதின் கீழ் 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு ₹ 208 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**26.** நடப்பு நிதியாண்டில் பல்வேறு துறைகளின் கீழ் இந்த அரசு சாதித்த சில முக்கிய சாதனைகளை இப்போது நான் கூற விரும்புகிறேன்.

**வேளாண் மற்றும் கால்நடை பராமரிப்பு**

**27.** பயிர்சாகுபடி செய்யும் நிலங்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும், விவசாயிகள் மேம்படுத்தப்பட்ட மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப்

பயன்படுத்துவதற்காகவும் இந்த அரசு உற்பத்தி ஊக்கத் தொகையை தொடர்ந்து வழங்கிவருகிறது. மேலும், உரிய நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொண்டு பொருளாதார சிரமங்களிலிருந்து மீள்வதற்கு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக பல்வேறு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**28.** கடந்த ஐந்து ஆண்டுகளில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 2020-2021ஆம் ஆண்டில் குவிண்டாலுக்கு ₹ 1,868ஆக இருந்த நிலையில், 2024-2025ஆம் ஆண்டில் குவிண்டாலுக்கு ₹ 2,300ஆக அதிகரித்துள்ளது. கம்பு 77%, அதைத் தொடர்ந்து துவரம் பருப்பு 59%, மக்காச்சோளம் 54% மற்றும் உளுந்து 52% உற்பத்தி செலவைவிட, விவசாயிகளுக்கு எதிர்பார்க்கப்படும் லாப வரம்பு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பயிர்களுக்கு, உற்பத்தி செலவை விட விவசாயிகளுக்கு லாப வரம்பு 50% என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில் 15,405 ஹெக்டேராக இருந்த நிகர சாகுபடி பரப்பளவு 2023-24ஆம் ஆண்டில் 16,274 ஹெக்டேராக அதிகரித்துள்ளது. அதேபோல், மொத்த பயிர் சாகுபடி பரப்பளவு 2020-21ஆம் ஆண்டில் 26,759 ஹெக்டேராக இருந்தது. இது, 2023-24ஆம் ஆண்டில் 30,416 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

**29.** 2025-26ஆம் ஆண்டில், மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டங்களின் கீழ், ₹ 15.82 கோடியை தற்காலிகமாக ஒதுக்குவதாகவும் மற்றும் 'தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம்' (NMMF) திட்டத்தின் கீழ் செயல்படுத்த புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

**30.** 2021-22ஆம் ஆண்டு முதல் மத்திய நிதி உதவி திட்டமான வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத் திட்டத்தின் (SMAM)-கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்காலைச் சேர்ந்த 440 விவசாயிகள் பயனடையும் வகையில், டிராக்டர்கள், பவர் டில்லர்கள், நாற்று நடவு இயந்திரங்கள், பவர் வீடர்கள், ரோட்டவேட்டர்கள், பேலர் மற்றும் ட்ரோன்கள் போன்ற பல்வேறு விவசாய இயந்திரங்கள் வாங்கியதற்காக ₹ 7.24 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின்கீழ் ₹ 4.65 கோடி மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

**31.** பிரதம மந்திரியின் முதன்மைத் திட்டமான பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) என்னும் பயிர் காப்பீட்டு திட்டம், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் 2016-17 ரபி பருவம் முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-22 ரபி, 2022 காரிஃப் மற்றும் 2023 காரிஃப் பருவங்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக ₹ 12.30 கோடி, 20,513 விவசாயிகளுக்கு வெற்றிகரமாக

வழங்கப்பட்டுள்ளது. ஃபெங்கல் புயலால் ஏற்பட்ட அதிக மழையின் பேரழிவால் மகசூல் இழப்பைச் சந்தித்த சம்பா / தாளடி பருவத்தில் பயிரிடப்பட்ட பயிர்களில் பயிர் வெட்டும் பரிசோதனைகளை நடத்தும் பணி நடைபெற்று வருகிறது. பருவகால ஒழுங்குமுறையின்படி மார்ச் 31, 2025-க்குள் பதிவேற்றப்படும் பயிர் வெட்டுதல் மூலம் பரிசோதனைகளில் பெறப்பட்ட உண்மையான மகசூல் தரவு, தேசிய பயிர் காப்பீட்டு போர்ட்டலில் மகசூல் இழப்பைக் கணக்கிடுவதற்கு உட்படுத்தப்படும். மேலும், மகசூல் இழப்பீடானது NCIP-இன் டிஜிட்டல் பரிவர்த்தனை வழியாக விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படும்.

**32.** பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின் கீழ் இதுவரை 19 தவணைகளாக ₹ 33.54 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**33.** இந்திய உணவுக் கழகத்தால் (FCI) கொள்முதல் செய்யத் தகுதி பெறுவதற்கும், குறைந்தபட்ச ஆதரவு விலையைப் பெறுவதற்கும், ‘விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான மற்றும் லாபகரமான விலையை உறுதி செய்வதற்காக, நெல்லின் தரத்தை மேம்படுத்தி, அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு கிலோ நெல்லுக்கு ₹ 2 ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்குதல் என்ற ஒரு புதிய திட்டத்தை புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

**34.** பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ், அதிக மகசூல் தரும் பயிறு வகைகளான கரும்பு, மணிலா, பயறு வகைகள், எள், சிறுதானியங்கள், பருத்தி மற்றும் இயற்கைவழி நெல் உற்பத்தி செய்த புதுச்சேரியை சேர்ந்த 7,934 விவசாயிகளுக்கும் மற்றும் காரைக்காலைச் சேர்ந்த 3,497 விவசாயிகளுக்கும் முறையே ₹ 5.87 கோடியும் மற்றும் ₹ 4 கோடியும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**35.** இவ்வாட்சிப்பரப்பை சேர்ந்த விவசாயிகள் பயனடையும் வகையில் பாசனத்திற்காக இலவச மின்சாரம் வழங்க ₹ 9.15 கோடி மானியம் வழங்கப்பட்டது.

**36.** 2024-25ஆம் ஆண்டில் தடுப்பு நடவடிக்கையாக, கால்நடைகள், செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு கோமாரி நோய்க்கு எதிராக 73,000 தடுப்பூசிகள், கன்றுகளுக்கு புருசெல்லாவிற்கு எதிராக 6,500 தடுப்பூசிகள், கால்நடைகளுக்கு தோல் நோய்க்கு எதிராக 72,500 தடுப்பூசிகள் மற்றும் கோழிகளுக்கு ராணிகெட் நோய்க்கு எதிராக 13,500 தடுப்பூசிகள் என மொத்தம் 1,65,500 தடுப்பூசிகள் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இலவசமாக செலுத்தப்பட்டுள்ளது.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**37.** நடப்பு நிதியாண்டில், மத்திய அரசின் ‘அந்தியோதயா அன்ன யோஜனா’ (ஏழைகளுக்கான உணவுத் திட்டம்) மற்றும் PHH ரேஷன் அட்டைதாரர்களான 1.90 இலட்சம் நபர்கள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ₹ 15 கோடி செலவு செய்துள்ளது. புதுச்சேரி அரசு செயல்படுத்தி வரும் இலவச அரிசி திட்டத்தின்கீழ், ₹ 130.64 கோடி செலவு செய்யப்பட்டு 3.37 இலட்சம் ரேஷன் அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**38.** 2024ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நியாய விலைக் கடைகளின் மூலம் 10 கிலோ அரிசி மற்றும் 2 கிலோ சர்க்கரை இலவசமாக 3.37 இலட்சம் ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ₹ 17.43 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் 2025ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது 3.41 இலட்சம் ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பிற்கு பதிலாக ₹ 750 ரொக்கமாக, மொத்தம் ₹ 25.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**39.** முதலமைச்சரின் எரி வாயு மானிய திட்டத்தின்கீழ், 1.82 ரேஷன் அட்டைதாரர்கள் பயனடையும் பொருட்டு ₹ 13.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**40.** இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியத்திலும் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளும் செயல்பட தொடங்கி உள்ளன. மேலும், பொது விநியோக முறையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவு**

**41.** கிராமப்புறங்களில் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு கடன் உதவி வழங்குவதில் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன.

**42.** விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் சேவை கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களான 1,579 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் அவர்கள் பெற்ற அசல், அதற்கான வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான ₹ 11.61 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**43.** கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் 8,612 உறுப்பினர்களுக்கு நேரடி பணப்பயன் பரிமாற்ற முறையில் கால்நடைத் தீவன மானியமாக ₹ 7.23 கோடி வழங்கப்பட்டுள்ளது. கைத்தறி கூட்டுறவு அமைப்புகளை மேம்படுத்த ₹ 2.54 கோடி கொடுக்கப்பட்டுள்ளது.

**44.** மத்திய அரசின் கூட்டுறவு அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான முயற்சிகளின் அடிப்படையில் கிராமப்புர கூட்டுறவுகளின் வருமானத் திறனை உயர்த்தும் விதமாக அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் பல்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, சுமார் 56 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் ஒரே மாதிரியான துணை-விதிகள் பின்பற்றப்படுகின்றன, 26 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் பொது சேவை மையங்களை தொடங்கியுள்ளன, மற்றும் பிரதம மந்திரி மலிவு விலை மருந்தகங்கள் தொடங்க 15 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், தவளக்குப்பம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் Generic மருந்துகளை மலிவு விலையில் விற்பனை செய்ய தொடங்கியுள்ளது. இதன்மூலம் மிகவும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிராம அளவில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், 9 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் உர வினியோக மையங்களாக செயல்படுகின்றன. அவற்றுள் 6 சங்கங்கள் பிரதம மந்திரி விவசாய உரக்கடைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சான்றளிக்கப்பட்ட விதைகள், ஏற்றுமதி மற்றும் இயற்கை உணவு உற்பத்தி போன்றவற்றிக்காக தேசிய அளவிலான ஒருங்கிணைந்த மாநில கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளன.

இந்த தளத்தின் மூலம் விவசாயிகள் தங்களது பொருட்களை தேசிய அளவில் விற்பனை செய்ய முடியும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின்விசை**

**45.** இந்த அரசானது கடந்த நான்கு ஆண்டுகளில் மின்சாரத்தை அதிகபட்சமாக 490MW-லிருந்து 570MW வரை கொள்முதல் செய்து ஒரு சிறப்பான சேவை செய்துள்ளது. இது மக்களின் முழுதேவையை அறிந்து 2,782 மில்லியன் யூனிட்டிலிருந்து 3,200 மில்லியன் யூனிட் வரை உபயோகப்படுத்த ஏதுவாக இருந்தது.

**46.** உள்கட்டமைப்பு வசதிகளில் மின்சாரம் முக்கியமான ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை. இத்துறையின் செயல்பாட்டுத் திறனானது ஒட்டுமொத்த புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. நமது ஆட்சிப்பரப்பின் மின்சாரநிலைமை நிலையானதாகவும், திருப்தி அளிக்கக் கூடியதாகவும் இருப்பதை உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுகொள்வார்கள்.

**47.** பிரதம மந்திரியின் 'சூர்யா கர் திட்டத்தின்' மூலம் வீடுகளின் மேற்கூரையில் சூரிய மின் உற்பத்தி பேனல்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 2024-25ஆம் ஆண்டு 493 மின் நுகர்வோர்கள்

தங்களுடைய வீடுகளின் மேற்கூரையில் மொத்தம் 1.88 MW திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி பேனல்களை நிறுவியுள்ளனர். இதற்கான மானியமாக மொத்தம் ₹ 3.01 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**48.** மின் அமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ₹ 4.11 கோடி திட்ட செலவில் 132 KV-க்கு மேல் இயங்கும் துணை மின் நிலையங்களில் உள்ள அனைத்து மின்சாரத்தை கடத்தும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆப்டிகல் ஃபைபர் கேபிள்களாக (Optical Fiber Cable) மாற்றப்பட்டு Remote Terminal Unit-கள் நான்கு பிராந்தியத்திலும் பொருத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

**49.** இந்த ஆண்டு பல்வேறு மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், 43 புதிய பகிர்மான மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு அவற்றின் திறன் அதிகரிகப்பட்டுள்ளன. மேலும், 80 கிலோ மீட்டர் உயர் மின்அழுத்தப் பாதைகளும் மற்றும் குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 6 உயர் மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 19 குறைந்த மின்அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 6,630 வீடுகளுக்கும், 1,298 வர்த்தக நிறுவனங்களுக்கும். 182 வேளாண் பம்பு செட்டுகளுக்கும் மற்றும் 2,366 LED தெரு மின் விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதை மின் வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 157 குறைந்த மின் அழுத்த மேல்நிலை மின் இணைப்புகள் புதை மின் வட அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

**50.** இவ்வாட்சிப்பரப்பில் நடப்பாண்டு, ஸ்மார்ட் மின் அளவிகள் பொருத்துவது, மின்விநியோக கட்டமைப்பை மேம்படுத்துவது, இலாஸ்பேட்டை மற்றும் தவளகுப்பத்தில் புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பது, கோர்காடு, தேத்தாம்பாக்கம் துணை மின் நிலையங்கள் மற்றும் தொண்டமாநத்தம் தானியங்கி துணை மின் நிலையத்தின் மின் மாற்றிகளின் திறனை மேம்படுத்துவது, வெங்கட்டா நகர் துணை மின் நிலையத்திலிருந்து ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள Gas Insulator துணை மின் நிலையம் வரை 110 KV புதை மின்வடங்களை அமைத்தல் போன்ற திட்டங்கள் ₹ 689.25 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**51.** பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் சக்திகளில் ஒன்றான மீன்வளத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவதில் இந்த அரசு முனைப்புடன் உள்ளது.

**52.** சுமார் 1.14 இலட்சம் மீனவ சமுதாய கிராம மக்கள், 50 மீனவ கிராமங்களில் மீன்பிடி தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வசித்து வருகின்றனர். புதுச்சேரியில் 1,911 இயந்திரம் பொருத்தப்படாத கட்டுமரங்கள், 3,376 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள், 730 மீன்பிடி விசை படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் மூலமாக மீனவர்கள் மீன்பிடி தொழிலை மேற்கொண்டு,

நமது மாநில வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கின்றனர். புதுச்சேரியில் மீன்வள உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மீன்பிடி துறைமுகம், மீன் இறங்குதளம், வலை பழுதுபார்க்கும் கூடம், ஏலக்கூடம், பணிக்கூடம், வலை பாதுகாப்பு கூடம் மற்றும் மீன் உலர்த்தும் தளம் போன்ற பல்வேறு வசதிகளை அரசு நிறுவியுள்ளது. கூடுதலாக, மீன்வளர்ப்பை ஊக்குவிக்க அதிக நன்னீர் மற்றும் உவர் நீர் பகுதிகள் மூலம் மீன்வளர்ப்பின் பரப்பளவை மேம்படுத்த முடிவு செய்துள்ளது. மீன்வளத்துறை வலுவான கூட்டுறவு இயக்கத்தைக் கொண்டுள்ளது. மேலும் நமது மாநில வளர்ச்சியில் பெண் சக்தியின் பங்கை ஊக்குவிக்க, மீனவ பெண்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவதில் இப்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, காரைக்காலில் சமீபத்தில் மூன்று புதிய மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கியுள்ளது அதற்கு ஒரு சான்றாகும்.

**53.** மத்திய அரசின் PMMSY திட்டத்தின் கீழ், காரைக்காலில் “ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகம்” அமைப்பதற்காக மத்திய அரசு ₹ 120 கோடியை ஒதுக்கியுள்ளது. பெங்களூருவில் உள்ள மத்திய கடலோர மீன்பிடி பொறியியல் நிறுவனம் (CICEF), காரைக்காலில் வரவிருக்கும் புதிய மீன்பிடி துறைமுகத்தில், ஸ்மார்ட் மற்றும் பசுமை கூறுகளை உலகத் தரத்தில்

நிறுவுவதில் முக்கிய பங்கு வகிக்கவுள்ளது. இத்தகைய உலகத் தரம் வாய்ந்த துறைமுக வசதி காரைக்கால் மீனவ சமூகத்திற்கு மத்திய அரசின் ஒரு மிகப்பெரிய பரிசாக இருக்கும்.

**54.** புதுச்சேரி மாநிலத்திற்கு ₹ 4.34 கோடி மதிப்பீட்டில் 14 இடங்களில் கடல் செயற்கைப் பாறைகள் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. CMFRI நிறுவனத்தின் பரிந்துரைப்படி புதுச்சேரியில் 10 இடங்களும், காரைக்காலில் 4 இடங்களும் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. செயற்கைப் பாறை கட்டமைப்புகளின் சிமெண்ட் கான்கிரீட் வார்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. 29-01-2025 அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற மத்திய அரசின் திட்ட மதிப்பீட்டுக் குழுவின் 70-வது கூட்டத்தில், PMMSY-இன் கீழ் 100% மத்திய அரசின் நிதி உதவியுடன் ₹ 7.44 கோடி மதிப்பில் மேலும் 25 செயற்கைப் பாறைகளை கூடுதலாக அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**55.** சர்வதேச கடல் எல்லைக்கோட்டை (IMBL) கடப்பதால் ஏற்படும் சிக்கல்களை இந்த அரசு அறிந்து இருக்கிறது. மேலும் ஆழ்கடல் மீன்பிடி கொள்கை மூலம் இதற்கு ஒரு நிரந்தர தீர்வை வழங்க உத்தேசித்து இருக்கிறது. இந்த அரசு PMMSY திட்டத்தின் கீழ் ₹ 1.2 கோடி மதிப்பிலான 2 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை புதுச்சேரி மீனவப் பெண்களுக்கும், 4 மீன்பிடி படகுகளை

காரைக்கால் மீனவப் பெண்களுக்கும் 60% மானியத்துடனும் மீதமுள்ள 40% வங்கி கடன் மூலமாகவும் வழங்க, மொத்தம் 6 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**56.** ஆழ்கடல் மீன்பிடித்தொழிலை பெரிய அளவில் ஊக்குவிப்பதற்காக, புதுச்சேரி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, இந்திய மீன்வள ஆய்வு மையம் (FSI), மும்பை, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI), கொச்சி, இந்திய தேசிய கடல் தகவல் சேவைகள் மையம் (INCOIS), ஹைதராபாத் மற்றும் கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA), கொச்சி, ஆகிய அனைத்து மத்திய மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் கூட்டுப் பணிக்குழு கூட்டத்தை நடத்தியது. மீனவர்கள் அந்தமான் கடலை நோக்கிச் செல்ல ஊக்குவிக்கவும், செயற்கைக்கோள் மற்றும் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக மீன்வளம் உள்ள மண்டலங்களை அடையாளம் கண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பெரிய அளவில் மீன் பிடித்து கொண்டுவர தேவையான ஆழ்கடல் மீன்பிடித் தொழில் கொள்கையை உருவாக்குவதற்கான பணிகளை கூட்டுப் பணிக்குழு மேற்கொண்டு வருகிறது. மேலும், மதிப்புக் கூட்டப்பட்ட மீன்வளத்தை ஏற்றுமதிச் செய்வதற்கான சாத்திய கூறுகளையும் இந்தக்குழு பரிந்துரை செய்யும்.

**57.** இந்த முயற்சி சர்வதேச கடல் எல்லைக்கோட்டை (IMBL) கடப்பதால் ஏற்படும் மீனவர்களின் துன்பத்தைத் தணித்து மீனவ சமூகம் எதிர்கொள்ளும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

**58.** மத்திய துறைமுகம், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம், புதுச்சேரியில் அரியாங்குப்பம் ஆறு, வம்பாகீரப்பாளையம் மற்றும் காரைக்கால் அரசலாற்றில் ₹ 190 கோடி மதிப்பீட்டில் 3 மிதவை படகு நிறுத்தும் இடங்கள் அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல், மாகி மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) ₹ 70 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**59.** 2024-25-ஆம் ஆண்டில், இந்தத் துறை மீனவ சமூகத்திற்கான நலத்திட்ட நடவடிக்கைகளாக, உள்கட்டமைப்பு வசதிகள், டீசல் மானியம், மீன்பிடி உபகரண தேவைகள் போன்றவற்றிற்காக மத்திய மற்றும் மாநில அரசின் நிதியாக ₹ 62.00 கோடியை செலவிட்டுள்ளது. இது மீனவர்களின் தொழில்முறை வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருக்கிறது.

**60.** கடல்வள உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சியில், கடல் பாசி (Sea Weed) வளர்ப்புக்கான சாத்தியமான இடங்களை அடையாளம் காண CMFRI நிறுவனம்

கேட்டுக்கொள்ளப்பட்டது. புதுச்சேரியில் 15 இடங்களையும், காரைக்காலில் 10 இடங்களையும் சாத்தியமுள்ள இடங்களாக CMFRI அடையாளம் கண்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மீனவ பெண்களை மேம்படுத்தும் வகையில் கடலில் கூண்டு வைத்து (Sea Cage) மீன் வளர்க்க மற்றும் கடல் பாசி (Sea Weed) வளர்ப்பு திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்த CMFRI பரிந்துரை செய்துள்ளது.

**61.** தலா ₹ 2 கோடி மதிப்பீட்டில் இரண்டு காலநிலை தாங்கும் கடலோர மீன்பிடி கிராமங்களை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புதுச்சேரியில் நரம்பை மற்றும் காரைக்காலில் பட்டினச்சேரி ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

**62.** நடப்பு நிதியாண்டில், 19,021 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணமாக ₹ 12.36 கோடியும், இதேபோல் மழைக்கால நிவாரணமாக 19,129 மீனவ குடும்பங்களுக்கு ₹ 5.74 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 8,812 மீனவர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக ₹ 21.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட 350 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு டீசல் மானியாமாக ₹ 10.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**63.** இந்த அரசு, பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் மூலம் சுகாதார மேம்பாடு, நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்கி வருகிறது.

**64.** 2024ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் சிறந்த பல் மருத்துவக் கல்லூரிக்கான “PIERRE FAUCHARD” அகாடமி விருதை மகாத்மா காந்தி முதுகலை பல் மருத்துவ அறிவியல் கல்லூரி பெற்றுள்ளது என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், சிறப்பு குழந்தை மருத்துவம் மற்றும் பல் நோய் தடுப்பு மருத்துவத்தில் புதிய முதுகலை படிப்புகளுக்கு (MDS) மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**65.** பிரசவ அறை மற்றும் பொது சுகாதார வசதிகளில் மகப்பேறு அறுவை சிகிச்சை அரங்குகளில் மேம்பட்ட தரமான பராமரிப்பை வழங்கியதற்காக ‘லக்ஷ்யா தேசிய சான்றிதழை’ ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை பெற்றுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்கி வருவதால் இவ்வாட்சிப்பரப்பின் தாய் மற்றும் குழந்தை இறப்புவிகிதம் தேசிய இலக்கை விட மிகவும் குறைவாக உள்ளது.

**66.** 2024-25ஆம் ஆண்டில், புதுச்சேரி மற்றும் அதை ஒட்டிய மாநிலங்களைச் சேர்ந்த சராசரியாக 11,64,816 நோயாளிகள், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமூக சுகாதார மையங்களில் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

**67.** மேலும், அரசு மருத்துவமனைகள் 94 திறந்த இதய மாற்று வழி அறுவை சிகிச்சைகள் மற்றும் 6 வால்வு மாற்று அறுவை சிகிச்சைகள் உட்பட 28,939 பெரிய மற்றும் சிறிய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

**68.** இருதயவியலில் ஒரு மேம்பட்ட கேத் ஆய்வகமும், நரம்பியலில் தீவிர சிகிச்சை பிரிவும், தொலை தூர பிராந்தியங்களின் ஆரம்ப சுகாதார சேவைகளை ஆதரிப்பதற்கான முழு அளவிலான டெலி மெடிசின் மையமும் மற்றும் பிரத்தியேக பக்கவாத சிகிச்சையகமும், நடப்பாண்டில் இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**69.** பிரதம மந்திரியின் 'சுரக்க்ஷித் மாத்ரித்வ அபியான்' (கருவுற்ற பெண்களுக்கு இலவசமாக பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பை வழங்கும் திட்டம் – PMSMA) திட்டத்தின்கீழ், கருவுற்ற காலத்தில் ஏற்படும் ஆபத்தை அடையாளம் காணவும்,

சுகப்பிரசவத்தை உறுதி செய்யவும், 8 அல்ட்ரா சவுண்டு இயந்திரங்கள் (Ultra Sound Machines) ₹ 1.06 கோடி செலவில் வாங்கப்பட்டு அரியாங்குப்பம், பாகூர், வில்லியனூர், இலாஸ்பேட், திருபுவனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மண்ணாடிப்பட்டு, கரிக்கலாம்பாக்கம், திருநள்ளார் சமூக சுகாதார நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளன.

**70.** மாண்புமிகு பாரதப் பிரதமர் 'ஆயுஷ்மான் பாரத் வயா வந்தனா திட்டத்தை' 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி வைத்தார். இத்திட்டமானது, 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சையை அளிக்கும் சுகாதார காப்பீட்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், நம் ஆட்சிப்பரப்பில் 7,600 பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.

**71.** 'ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' (பிரதம மந்திரியின் மருத்துவ காப்பீட்டு திட்டம்) திட்டத்தின்கீழ், 56,392 பயனாளிகள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். மேலும், 36,207 பயனாளிகள் ₹ 29.86 கோடி அளவிற்கு மருத்துவ காப்பீட்டு பலன்களை பெற்றுள்ளனர்.

**72.** காரைக்காலில் 30 படுக்கைகள் கொண்ட ஆயுஷ் மருத்துவமனை கட்டுவதற்கு மத்திய ஆயுஷ் அமைச்சகம் ₹ 10.50 கோடிக்கு ஒப்புதல் அளித்தள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**73.** தொழில்நுட்பம் சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாகும். நிர்வாகத்தில் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைந்து செயல்பட இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**74.** கோப்புகளின் செயலாக்கத்தை தானியங்கு முறையில் அனைத்து துறைகளிலும் பயன்படுத்த மின்னனு – அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, தேசிய தகவலியல் மையத்திலிருந்து 10,000 பயனர் உரிமங்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை, 3,585 மின்னனு அலுவலக பயனர் முகவரிகள் உருவாக்கப்பட்டு 22,425 மின்னனு கோப்புகள் மற்றும் 1,11,147 மின்னனு–தபால்கள் மின்னனு – அலுவலகத்தில் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மின்னனு – அலுவலகம் இரண்டாம் கட்டம் தொடங்கப்பட்டு, அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், மின்னனு அலுவலக செயலாக்கம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

**தொழிலாளர் மற்றும் தொழிலாளர் நலம்**

**75.** தேசத்தை கட்டியெழுப்புவதில் தொழிலாளர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை இந்த அரசு முழுமையாக அறிந்திருக்கிறது, மேலும் அவர்களின் கண்ணியம், சுகாதாரம்

ஆகியவற்றைப் பாதுகாக்கவும் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் முழுமையான நலனை மேம்படுத்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

**76.** புதுச்சேரி கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 43,161 உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட பயன்களான திருமணம், மகப்பேறு, மருத்துவம், ஈமச்சடங்கு, மற்றும் இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவி போன்றவற்றிற்காக ₹ 23.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தீபாவளி ரொக்கப் பரிசு ₹ 4,000-யிருந்து ₹ 5,000-ஆக உயர்த்தப்பட்டு மொத்தம் ₹ 21.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கு சிறப்பு கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு அவர்களுக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**77.** புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர் நலச் சங்கத்தில் 27,394 உறுப்பினர்கள் பதியப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் மகப்பேறு உதவி மற்றும் இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவியாக 116 பயனாளிகளுக்கு ₹ 7.76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், தீபாவளி ரொக்கப் பரிசாக 26,625 உறுப்பினர்களுக்கு மொத்தம் ₹ 4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**78.** இந்த நிதியாண்டில், 19 தொழில்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தியுள்ளதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**உள்ளாட்சி**

**79.** ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர்குழாய் இணைப்புகள் இருப்பதை உறுதி செய்து இந்தியாவின் அனைத்து நகரங்களையும் "நீர் பாதுகாப்பானதாக" மாற்றுவதை நோக்கமாக கொண்டு 'அம்ருத் 2.0 திட்டம்', வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ் அனைவருக்கும் குடிநீர் வழங்கல், நீர்நிலைகளின் புனரமைப்பு மற்றும் கழிவுநீர் மேலாண்மை ஆகியவற்றிற்கு ₹ 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 15 MLD மற்றும் காரைக்காலில் 11 MLD கொள்ளளவுள்ள புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமானத்திற்கு ₹ 72 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 20% - 40% கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்த முடியும், இதன்மூலம் நீர் மேலாண்மை மேம்படுத்தப்படும். மூலதன நகர்ப்புற ஆளுமை மேம்பாட்டுக்காக, அம்ருத் 2.0 சீர்திருத்தங்களின் கீழ், குடிமக்களுக்கு சேவையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தரவு சார்ந்த நகர்ப்புற நிர்வாகத்திற்கான ஊக்கத்தொகையாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ₹ 8.4 கோடி அனுமதி அளித்துள்ளது.

**80.** ஸ்வச் பாரத் மிஷன் (நகர்ப்புறம்) 2.0 திட்டத்தின் கீழ், அனைத்து நகரங்களையும் 'குப்பையில்லா நகரங்களாக' உருவாக்குவதை மற்றும் AMRUT திட்டத்தின்கீழ் வராத நகரங்களில்

கழிவு நீர் மேலாண்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை, பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை மற்றும் சுகாதாரத் துறைகளில் ₹ 105.40 கோடி மதிப்பில் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய அரசு திடக்கழிவு மற்றும் கழிவு நீர் மேலாண்மை திட்டங்களுக்காக ₹ 105.40 கோடி மதிப்பீட்டில் அனைத்து நகராட்சிகளிலும் 3R (Reduce, Reuse, Recycle) கொள்கை அடிப்படையில் அனுமதி அளித்துள்ளது.

**81.** நடப்பாண்டில், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் மொத்தமாக சேகரிக்கப்பட்ட 4.55 இலட்சம் மெட்ரிக்டன் மரபு வழிக்கழிவுகள் ₹ 45.01 கோடி செலவில் பயோ-ரெமிடியேஷன் மற்றும் பயோ-மைனிங் முறையில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாமில் உள்ள நகர மற்றும் கிராமப்புற பகுதிகளில் தினசரி சராசரியாக சேகரிக்கப்பட்ட 200 முதல் 230 மெட்ரிக் டன் குப்பைகள் ₹ 87 கோடி செலவில் கையாளப்பட்டுள்ளது.

**82.** நதி மற்றும் கடலோர மாசுபாட்டைத் தடுக்க, ஏனாம் பகுதியில் 6 MLD மற்றும் மாகியில் 0.5 MLD கொள்ளளவு கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ₹ 31.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**காவல்**

**83.** 2024-25ஆம் ஆண்டில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்த காவல் துறை பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் குற்றங்களைப் புகார் அளிப்பதில் உதவுவதற்காக அனைத்து காவல் நிலையங்களிலும் "பெண்கள் பாதுகாப்பு குழுக்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. பயனுள்ள இரவு ரோந்து, 24 மணி நேரமும் செயல்படும் போலீஸ் ரோந்து மற்றும் கடுமையான தடுப்பு நடவடிக்கை காரணமாக, குற்றங்கள் முந்தைய ஆண்டைவிட 4% குறைந்துள்ளன. இந்த ஆண்டில் மொத்தம் 118 NDPS சட்டம் பதிவு செய்யப்பட்டு 278 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். புதுச்சேரி முழுவதும் உள்ள 51 கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் எதிர்ப்புப் பிரிவு அமைக்கப்பட்டு, அவ்வளாகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. இளைஞர்களின் ஆற்றலை ஆக்கபூர்வமான மற்றும் நேர்மறையான திசைகளில் செலுத்தும் நோக்கத்துடன் "மிஷன் இளமை" தொடங்கப்பட்டுள்ளது. புகார்களை எளிதாக பதிவு செய்வதற்காக "காரை காவலன்" மற்றும் "மிஷன் வீர மங்கை" என்ற செயலிகள் காரைக்காலில் தொடங்கப்பட்டுள்ளன.

**84.** 2024-25ஆம் ஆண்டில், சைபர் கிரைம் காவல் நிலையம் 135 வழக்குகளைப் பதிவு செய்து ₹ 4.14 கோடியை மீட்டுள்ளது. புதிய போக்குவரத்து சிக்னல் விளக்கு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது, இதில் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு (ITMS) மற்றும் தானியங்கி போக்குவரத்து மீறல் கண்டறிதல் அமைப்பு (ATVTS) ஆகியவை அடங்கும். மேலும், உள்கட்டமைப்பில் புதுச்சேரியில் ரெட்டியார்பாளையம் காவல் நிலையத்தின் மூன்று மாடி கட்டுமானப் பணிகள் ₹ 4.36 கோடி செலவில் நிறைவடைந்துள்ளது. பல்வேறு காவல் கட்டிடங்களின் பழுது மற்றும் பராமரிப்பிற்காக ₹ 2.42 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**ஊரக மேம்பாடு**

**85.** ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம்’ (MGNREGS) கிராமப் புறங்களில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு வேலை வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 9.63 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 46,049 கிராமக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 222 வேலைகள் ₹ 34 கோடி செலவில் 2024-25ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன.

**86.** 'தீனதயாள் அந்தியோதயா யோஜனா–தேசிய கிராமப்புற வாழ்வாதார மிஷன்' (DAY NRLM) திட்டத்தின் கீழ் 4,460 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, மூன்று வட்டங்களில் 55,197 கிராமக் குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பொருளாதார நிலைத் தன்மையை உறுதிப்படுத்த 1,320 சுயஉதவிக் குழுக்களுக்கு ₹ 71.30 கோடி அளவில் வங்கி இணைப்புக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**87.** 'சியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன்' திட்டத்தின் கீழ், திருநள்ளாறு 4 தேரோடும் வீதிகளை மேம்படுத்த ₹ 2.48 கோடி செலவு செய்து முடிக்கப்பட்டுள்ளது. பாகூர் பகுதியில் பேருந்து நிலையம் அமைத்தல், குடிநீர்க் குழாய் அமைத்தல் ஆகிய 2 பணிகள் ₹ 9.84 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**88.** 'பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம்' (PMGSY-II) கிராமங்களை இணைக்கும் ஒரு குறிப்பிடத்தக்க திட்டமாகும். கிராமங்களில் உள்ள வாழ்விடங்களை இணைக்க கடந்த 4 ஆண்டுகளில் 66.37 கிலோ மீட்டர் தூரம் நீளமுள்ள 31 சாலைகள் ₹ 28.11 கோடி செலவில் போடப்பட்டுள்ளது. இப்பணிகளின் மொத்த செலவினம் ₹ 28.11 கோடி ஆகும். PMGSY-III திட்டத்திற்கு மத்திய அரசு இந்த ஆண்டில் ₹ 70.46 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது.

**பள்ளிக்கல்வி**

**89.** கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதையும், ஒவ்வொரு குழந்தையையும் பிரகாசமான எதிர்காலத்திற்கு தயார்ப்படுத்துவதையும் இலக்காக கொண்டு எனது அரசாங்கம் புதுமையான திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது.

**90.** இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ₹ 17.50 கோடி செலவில் 98,341 மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

**91.** சர்வதேச சிறுதானிய ஆண்டினைக் கொண்டாடும் விதமாக அரசு அறிவித்தபடி 2024-25ஆம் ஆண்டில் “மாலைச் சிற்றுண்டித் திட்டம்” அறிமுகப்படுத்தப்பட்டது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு வாரம் இருமுறை, மாலை வேளையில், சிறுதானிய பிஸ்கட் மற்றும் சிறுதானிய மிட்டாய், மாநில அரசின் நிதியில் வழங்கப்படுகிறது. மதிய உணவுத் திட்டத்தோடு வாரம் மூன்று முறை அவித்த முட்டை மற்றும் புத்தகப் பையில்லா நாளில் இனிப்புப் பொங்கல் / அன்ன பாயாசம், அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**92.** அரசுப் பள்ளிகளில் கற்றல் மேம்பாட்டிற்காக சமக்ரா சிக்ஷா திட்டத்தின்கீழ் Interaction Panel Board அறிமுகப்படுத்தப்பட்டன.

**93.** 2022-23, 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளில் 11ஆம் வகுப்பு படித்த அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் மொத்தம் ₹ 60.58 கோடி செலவில் இலவச மடிக்கணினிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**94.** 11 மற்றும் 12-ஆம் வகுப்பு படிக்கும் அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை பெற நீட் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்ற மாணவர்களில் 15 பேர் அரசு ஒதுக்கீட்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் 2024-25ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

**சுற்றுலா**

**95.** பாரம்பரிய கட்டிடங்கள், இயற்கை எழில்மிக்க கடற்கரை மற்றும் கலாச்சாரப் பாரம்பரிய சிறப்பம்சங்களுடன் புதுச்சேரி, இந்தியர் மற்றும் வெளிநாட்டினர் மனங்களில் சுற்றுலா உணர்வைப் பிரதிபலித்த வண்ணம் உள்ளது.

**96.** புதுச்சேரியில் சுற்றுலாவை மேம்படுத்தும் பொருட்டு பல வளர்ச்சித் திட்டங்களைச் சுற்றுலாத்துறை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சுதேஷ் தர்ஷன் 1.0 திட்டத்தின் கீழ் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களான கடற்கரையை மேம்படுத்தல் பாரம்பரியம் மற்றும் ஆன்மீகச் சுற்றுலா திட்டங்கள் உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. அரசின் இத்திட்டங்கள் சுற்றுலாச் செயல்பாடுகளுக்கான தலமாகப் புதுச்சேரியை மாற்றியுள்ளது.

**97.** ஆஸ்திரேலிய நாட்டின் ஊடகமான Lonely Planet என்னும் செய்தி நிறுவனம் தனது 15–ஆம் பதிப்பில் உலக அளவில் அவசியம் பார்க்க வேண்டிய சுற்றுலாத் தலங்களில் பிரான்சு நாட்டின் தூலுஸ் (Toulous) முதல் இடமாகவும் புதுச்சேரியை 2–ஆம் இடமாகவும் தரவரிசைப்படுத்திச் சிறப்பித்துள்ளது என்பதைப் இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிந்ததே.

**98.** சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தின்படி "பாரம்பரிய நகர வளர்ச்சி" மற்றும் "காரைக்கால் கடற்கரை மற்றும் நீர்முனை அனுபவம்" அடையாளம் காணப்பட்டு அதற்காக மத்திய அரசு ₹ 45.29 கோடி ஒதுக்கியுள்ளது.

**99.** "ஆன்மீக யாத்திரை மறுவாழ்வு மற்றும் பாரம்பரியம் பெருக்க திட்டம்" (PRASAD)–ன்படி, திருநள்ளாறு சுற்றுலாப் பயணிகள் வசதிக்காகவும் மற்றும் ஆன்மீக பூங்கா அமைப்பதற்கும் மத்திய அரசு ₹ 25.94 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**100.** புதுச்சேரியில் அமைந்துள்ள திருக்காஞ்சி அருள்மிகு கங்கைவராக நதீஸ்வரர் ஆலயம், ஒதியம்பட்டு அருள்மிகு செங்கழுநீர் அம்மன் ஆலயம், காலாப்பட்டு அருள்மிகு முருகன் ஆலயம், பத்துக்கண்ணு பிள்ளையார்குப்பம் அருள்மிகு கூத்தாண்டவர் ஆலயம் மற்றும் காரைக்காலில் அமைந்துள்ள அருள்மிகு காரைக்கால் அம்மையார் ஆலயம், அருள்மிகு பார்வதீஸ்வார் ஆலயம், கோயில் பத்து அருள்மிகு திருமேனி அழகர் ஆலயம், திருவேட்டக்குடி ஆகிய திருக்கோயில்களின் மேம்பாட்டுட்டிற்காக "பிரசாத் திட்டத்தின்" கீழ், ஆலயங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ₹ 111.32 கோடிக்கான திட்ட அறிக்கையானது மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**101.** இப்பிரதேசமானது பல சித்தர்கள் மற்றும் முனிகள் வாழ்ந்து மறைந்து சமாதியான இடமாக இருப்பதால் சித்தர் பூமியாக திகழ்கிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. இதனால் இப்புதுச்சேரி பகுதிக்கு பல ஆன்மீக சுற்றுலா பயனாளிகள் வந்து செல்கின்றனர். இங்கு அகத்தியர், ஸ்ரீ கடுவெளிசித்தர், அருணகிரிநாதர், வடலூர் இராமலிங்க அடிகளார் மற்றும் சுவாமி விவேகானந்தர் போன்ற சித்தர்கள் மற்றும் முனிவர்கள் நினைவாக "சித்தர்கள் சுற்றுலா பயணம்" என்ற

அமைப்பின்கீழ், சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுவதற்காக "ஆன்மீக ஆரோக்கிய பயணம்" என்னும் நூல் "உலக சுற்றுலா தினம் 2024" கொண்டாட்டத்தின் போது வெளியிடப்பட்டது.

**போக்குவரத்து**

**102.** நடப்பாண்டில், 38 புதிய பேருந்துகள் வாங்கவும் மற்றும் 15 பழைய பேருந்துகளைச் சீரமைக்கவும் ₹ 17.30 கோடி செலவு செய்யப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**103.** தேங்காய்த்திட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள 3.58 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டு ஆய்வு மற்றும் சான்றளிப்பு மையம் அமைப்பதற்கு ₹ 15.75 கோடி செலவிடப்படும்.

**104.** புதுச்சேரியில் ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்காக தேங்காய்த்திட்டு வருவாய் கிராமத்தில் 10.50 ஏக்கர் நிலம் ₹ 19.35 கோடி மதிப்பீட்டில் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**105.** பொலிவுறு நகரம் (Smart City) திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் 15 இடங்களில் நவீன பேருந்து நிழற்குடைகளின் கட்டுமான பணிகள் ₹ 3.25 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. மாசு இல்லாத பொதுப் போக்குவரத்தை வழங்குவதற்காக 38 மின்னனு ரிக்ஷாக்கள் ₹ 96 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. இந்த மின்னனு ரிக்ஷாக்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் இயக்கப்படும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்**

**106.** இவ்வாட்சிப்பரப்பின் மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறிப்பிடத்தக்க விகிதத்தில் இருக்கின்றபடியால், அவர்களின் நலனில் எனது அரசு மேலான முன்னுரிமை அளிக்கின்றது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையானது ஆதிதிராவிடர் நல துணைத்திட்டத்தின்படி மற்ற துறைகளையும் ஒருங்கிணைத்து அவர்கள் நலன்சார்ந்த திட்டங்களை செயல்படுத்துகிறது. இந்த வருடத்தில் SCSP திட்டத்தில் ₹ 508 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 95% சதவீதம் செலவு செய்யப்படுள்ளது. மாணவர்களின் உதவித்தொகையாக கடந்த ஆண்டு ₹ 57 கோடியும், இந்த நிதியாண்டில் ₹ 75 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்படி ₹ 4 இலட்சம் மாநிலப் பங்காக வேறு எந்த மாநிலத்திலும் அளிக்காத அளவிற்கு அதிகபட்ச பங்களிப்பாக இருக்கின்றது. இதற்காக ₹ 6.64 கோடி மானியம் வழங்கப்பட உள்ளது.

**107.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகநலம் சார்ந்த திட்டங்களுக்கு வருமான உச்சவரம்பானது ₹ 2 இலட்சத்திலிருந்து, ₹ 8 இலட்சமாக மாற்றியது அரசின் வரலாற்று சிறப்பான முடிவு என்பது தங்களுக்கு தெரிந்ததே. இதன் மூலம் அதிக எண்ணிக்கையான பயனாளிகள் தகுதியடைவார்கள். கலப்புமண திருமண உதவி ₹ 2.5 இலட்சத்திலிருந்து ₹ 3.5 இலட்சமாகவும்,

வாய்ப்பு உதவித் தொகை ₹ 3,000-லிருந்து ₹ 6,000-ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் மணப்பட்டு மற்றும் TN பாளையம் பகுதியில் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 340 நபர்களுக்கு இலவச மனைப்பட்டா கூடிய விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இது 1,000 பேருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ₹ 50 கோடி அளவிற்கு SC/ST குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனது அரசு தொடர்ந்து SC/ST மக்கள் மீது தீவிர கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது.

**சமூக நலம்**

**108.** மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் சமூதாயத்தின் பிற நலிவடைந்த வகுப்பினர் சமூக மற்றும் பொருளாதார நிலையில் மேம்பாடு அடைய இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**109.** மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ₹ 3,000 முதல் ₹ 4,800 வரையிலான மாதாந்திர நிதி உதவியில் ஒவ்வொரு பிரிவிலும் ₹ 1,000 உயர்த்தப்பட்டு, 545 புதிய பயனாளிகளையும் சேர்த்து 20,630 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ₹ 59.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**110.** பெண்கள் மற்றும் குழந்தைகளின் பொருளாதார, சுகாதார மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களுக்கு அரசு தொடர்ச்சியான ஆதரவையும், நிதி உதவியையும் வழங்கிவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

**111.** முதியோர் ஒய்வூதிய திட்டத்தை இந்த அரசு வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் என மொத்தம் 1,81,616 பயனாளிகள் மாதாந்திர நிதி உதவியாக ஆண்டுக்கு ₹ 522.43 கோடி பெற்றுவருகின்றனர். இவ்வாட்சிப்பரப்பில் வறுமைகோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பத் தலைவிகளுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், வறுமைகோட்டிற்கு கீழ் வசிக்கும் 56,000 குடும்பத் தலைவிகளுக்கு நிதியுதவியாக ₹ 31 கோடி வழங்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பண உதவியாக மொத்தம் ₹ 14 கோடி, 1,40,000 வறுமைகோட்டிற்குகீழ் உள்ள ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**112.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் புதியதாகப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்கும் முதலமைச்சரின் அரவணைப்பு திட்டத்தின்கீழ், 1,420 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் நிதி உதவியாக ₹ 7.10 கோடி செல்வமகள் சேமிப்பு கணக்கு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**113.** பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், முதல் குழந்தைப் பேறுக்கு ₹ 5,000 மற்றும் இரண்டாவது குழந்தைப் பேற்றில் பெண் குழந்தையாக இருப்பின் ₹ 6,000 ஊக்கத் தொகையாக 3,143 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனடையும் வகையில் மொத்தம் ₹ 2.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ஊட்டச்சத்துமிக்க இணை உணவு ₹ 52.16 கோடி செலவில் 26,997 குழந்தைகள் மற்றும் 6,432 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**114.** மாநில விடுதலை வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், மாதாந்திர ஓய்வூதியமாக ₹ 12,000 வீதம் 945 ஓய்வூதியதாரர்களுக்கு ₹ 13.60 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**115.** மாண்புமிகு பாரதப் பிரதமரின் தொலைநோக்கு பார்வை கொண்ட "விக்சிட் பாரத்-2047" (VIKSIT BHARAT-2047), நாடு விடுதலை பெற்ற நூற்றாண்டான 2047-இல் இந்தியாவை

முழுமையான வளர்ச்சி பெற்ற நாடாக மாற்றுவதற்கான வழிகோலாகும். பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு, உள்கட்டமைப்பு வளர்ச்சி, சமூக ஆட்சி அதிகாரம், ஒருங்கிணைந்த வளர்ச்சியைத் தக்கவைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அடிப்படை விதியாகும். விக்சிட் பாரத் – 2047 என்கிற முன்னோக்குத் திட்டத்தின் அடிப்படை கொள்கையை ஒருங்கிணைத்து 'BEST புதுச்சேரி' எனும் மாண்புமிகு பாரதப் பிரதமரின் தொலைநோக்கு பார்வையை முழுமையாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை தற்சார்பு, வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியுடன் கூடிய மாநிலமாக உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**116.** மாண்புமிகு பாரதப் பிரதமரின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் மாநில மக்களின், குறிப்பாக இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலமாக புதுச்சேரியை BEST (வணிகம், கல்வி, ஆன்மீகம் மற்றும் சுற்றுலா மையம்) புதுச்சேரியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**117.** யூனியன் பிரதேசத்தின் சமமான வளர்ச்சிக்காக உள்கட்டமைப்பு வளர்ச்சியிலும் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. அரசு எடுத்துக் கொண்ட நலத்திட்டங்களும் மற்றும் செயல் திட்டங்களும் வேகமான நிலைநிறுத்தக் கூடிய ஒருங்கிணைந்த வளர்ச்சி என்கிற தொலைநோக்குப் பார்வையும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

**118.** மாநிலத்தின் வளர்ச்சியானது, சேவை மற்றும் தொழில் துறைகளை முதன்மையாக நம்பியுள்ளது என்பதை நாம் உணர்ந்துள்ளோம். அதற்காக முழு முனைப்புடன் நாம் பணியாற்றுகிறோம். வேளாண் மற்றும் அதைச்சார்ந்த துறைகளும் மின்னணு விவசாயம், மாற்றுப்பயிர்முறை, மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தி பொருட்கள் கால்நடை உற்பத்தி, மீன் வளத்துறை ஆகியவை அதன் தொடர்பான அணுகுமுறையை மாற்றிக் கொண்டுள்ளன. அதன் அடிப்படையில் நவீன மீன் உற்பத்தி முறைகள், பொலிவான உள்கட்டமைப்பு மற்றும் நவீனமையமாக்கப்பட்ட தொழில்நுட்ப திட்டம் மூலமாக நீலப் பொருளாதாரத்தை (Blue Economy) வலுவூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம், மருந்து உற்பத்தி, மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழில்துறைகள், சிறு, குறு தொழில் மேம்பாடு மற்றும் புதிய Startup நிறுவனங்களை தொடங்க ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்க முடியும்.

**119.** மாண்புமிகு பாரதப் பிரதமர் வழங்கிய தாரக மந்திரமான ‘BEST புதுச்சேரி’ என்பதற்கேற்ப எனது அரசு புதுச்சேரியை வணிகம், கல்வி, ஆன்மீக சுற்றுலாத் துறைகளில் மிகச் சிறந்த மாநிலமாக உருவாக்க உறுதி கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக:-

* புதுச்சேரியை ஒரு வணிக மையமாக மாற்றிட நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. சேதராப்பட்டு – கரசூர் பகுதியில் புதிய தொழிற்பண்ணை அமைக்கவும், மூடப்பட்ட AFT மற்றும் SBTML மில் வளாகத்தில் உள்ள நிலங்களில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா, ஜவுளிப் பூங்கா அமைக்கவும், PM-ஏக்தா மால் (PM-EKTA MALL) என்னும் வணிகச்சந்தை மற்றும் வணிக வளர்ச்சி முன்னேற்றத்திற்கான மையம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

* புதுச்சேரி ஏற்கனவே 100–க்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களைக் கொண்ட கல்விக் கேந்திரமாக விளங்குகிறது. இப்போது அரசின் கவனமானது புதிய கல்விக் கொள்கையை வலுவாகவும் திறம்படவும் செயற்படுத்துவதில் முனைப்பாக உள்ளது. அடிப்படைக் கல்வியைக் கட்டமைக்கவும் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் திறன் வளர்ப்புத் திட்டங்களைச் செயற்படுத்தி திறன் மிக்க இளைஞர்களிடம் இருந்து ஆற்றலைப் பெறவும் இது பெருந்துணை புரியும்.

* புதுச்சேரி சுற்றுலாவானது கடற்கரை, பாரம்பரியம், ஆன்மீகம், சமயம் போன்ற இழைகளால் ஆன நெசவாகும். நமது மாநில வளர்ச்சியில் சுற்றுலா

முக்கிய இடம் வகிக்கிறது. தற்போது தோராயமாக ஆண்டுக்கு 19 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள். 2047-ஆம் ஆண்டிற்குள் ஆண்டுக்கு 30 இலட்சம் சுற்றுலா பயணிகளுக்கு மேல் புதுச்சேரிக்கு வரவழைத்து சராசரி தங்கும் நாட்களை 1½ நாட்களில் இருந்து 7 நாட்களாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**120.** இத்தகைய விரிவான திட்டமிடலுடன் புதுச்சேரி அரசு வளர்ச்சி நோக்கிய எண்ணத்துடன், வழக்கமான பாணியில் இருந்து விலகி, தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடிய குடிமக்கள் நலன்சார்ந்த, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை தர உறுதிபூண்டுள்ளது.

**121.** எனது அரசின் சாதனைகளைக்கூறி என்னுடைய உரையை முடிக்கும் இத்தருணத்தில், மாண்புமிகு அவையானது புதுச்சேரியின் வளர்ச்சி, வளம் மற்றும் முன்னேற்றம் சார்ந்த அனைத்து கருத்துக்களையும் பயனுள்ள வகையில் விவாதிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு மிகுதியாக உள்ளது.

*நன்றி !* *வணக்கம் !*

*ஜெய்ஹிந்த் !*

*வாழ்க பாரதம் !* *வளர்க புதுச்சேரி !!*

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.
வெளியிட்டோர் : நிதித்துறை. புதுச்சேரி – 605 001.